**OS.No. 219 /2023**

**PW1 – சின்னசாமி த/பெ.நஞ்சப்பன்**

**நாள். 22.10.2024**

**வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இருளமூப்பன் எனது தாத்தா அவர் 1967 இல் பிப்ரவரி 27 இல் ஒரு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் சாசனத்தில் கண்டுள்ள சொத்து விவரமும் எனது தகப்பனார் 2007 ஆம் ஆண்டு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் இரண்டாவது ஐட்டமாக கண்டுள்ள சொத்து விவரமும் ஒன்றாக உள்ளது என்றால் இல்லை. தற்பொழுது காண்பிக்கப்படும் 12.4.2007 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் தான் எனது தகப்பனார் எழுதி வைத்த ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வாசா.ஆ 8. என்னிடம் காண்பிக்கப்படும் பி,வா.சா.ஆ 8 தான செட்டில்மெண்ட் பத்திரம் 12.4.2007 தேதியிட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பக்கம் மூன்றில் நான்காவது வரியில் எனது நீண்ட நாளைய அபிலாசை நிறைவேற்றும் பொருட்டு எனது மனைவி காளியம்மாள் என்பவருக்கு சயார்ஜிதமாக கடந்த 2.4.1976 ஆம் தேதிய அவிநாசி சார் பதிவாளர் 1.84497 டூ 499 .373/1976 ஆம் நம்பர் கிரைய பத்திரப்படி பாத்தியம் என்று குறிப்பு உள்ளது என்றால் அவ்வாறு தான் உள்ளது. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா,ஆ,5 மேற்படி பி,வா.ஆ 8 ஆவணத்தில் பக்கம் மூன்றில் உள்ள வாசகங்கள் அடிக்கப்பட்டு திருப்பூர் நத்தம் நிலவரி திட்ட தனி வட்டாட்சியர் அவர்களால் கடந்த 20.2.1991 தேதியில் வழங்கப்பட்ட நத்தம் நிலவரித் திட்ட பட்டாபடி பாத்தியப்பட்டதும் என்று குறிப்பு உள்ளது என்றால்….(இரு தரப்பிலும் பி.வசா,ஆ.8 ஆவணத்தில் மூன்றாவது பக்கத்தில் பக்கத்திலும் ஆவணத்தில் மூன்றாவது பக்கம் உள்ள குறிப்புகள் வெவ்வேறாக உள்ளது என்று ஒத்துக் கொண்டுள்ளதால் வாதி தரப்பில் மேற்படி நகல் ஆவணங்களின் அசல் வா.சா.ஆ 5 ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க இந்த நீதிமன்றம் அறிவுறுத்துகிறது.)

2.என் தாத்தா இருளமூப்பன் எழுதிவைத்த உயில் சாசனத்தின் அடிப்படையில் தாவா சொத்து எனக்கும் என் சகோதரருக்கும் சரி பாகம் உள்ளது என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே போலியான ஆவணங்களை உருவாக்கி அதை பதிவு செய்து தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல .

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி இரு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.10.22 18:50:33 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.